மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 91/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | கௌசிக் ராஜ் | நாள் | 19.09.2023 |
| தகப்பனார் பெயர் | சந்திர சேகர் | | |

**2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:-**

1) இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் பிரமாண பத்திரிக்கையின் அடிப்படையில் தான் தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரிதான். என் வழக்கை பொறுத்தவரை நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் பிரமாண பத்திரிக்கையில் 2, 3 பிரதிவாதிகளை பொறுத்து எவ்வித சாட்டுரைகளோ, சாட்சியங்களோ நான் அளிக்கவில்லை என்றாலும், 1ம் பிரதிவாதிக்கும், எனக்கும் இடையேயுள்ள பிரச்சனை தொடர்பாக தான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும், சரிதான்.

2) இவ்வழக்கு 1ம் பிரதிவாதிக்கும், எனக்கும் இடையேயுள்ள தனிப்பட்ட பிரச்சனை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இவ்வழக்கின் 2, 3 பிரதிவாதிகள் தேவையற்ற நபர்கள் என்றாலும், மேற்படி 2, 3 பிரதிவாதிகளை பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும், சரியல்ல.

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.